S.T.C No. 880/2022

PW-7 சுதர்சன்

Date: 18.07.2024

(Accused absent U/s.355 BNSS petition filed heard and allowed.)

**<u>மனு அனுமதிக்கப்பட்டு மனுவின் பேரில் எதிரி தரப்பில் மீண்டும் குறுக்கு விசாரணை</u>**

1. எதிரி தரப்பில் மேற்படி சம்பவத்தன்று புகார்தாரர் மீது புகார் கொடுக்கப்பட்டதா என்றால் சரிதான். அந்த வழக்கின் குற்ற எண்.143/2021 என்றால் சரிதான்.

2. எதிரி தரப்பில் புகார்தாரர் மீது கொடுக்கப்பட்ட வழக்கில் 147, 149, 448, 294(b), 323, 324. 506(ii) இ.த.ச வாக 8 நபர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. இவ்வழக்கின் புகார்மனு எந்த தேதியில் பெற்று விசாரணை செய்தீர்கள் என்றால் 15.09.2021ம் தேதி பெறப்பட்டு விசாரணை செய்யப்பட்டது. மேற்படி தேதிக்கு முன்பாக சம்பவ இடம் செல்லவில்லை விசாரணை ஏதும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான்.

4. புகார்தாரருக்கு கம்பி மற்றும் கம்பால் தாக்கி காயங்கள் ஏதும் ஏற்படவில்லை என்றும் அது சம்பந்தாமாக எந்த அரசு மருத்துவமனையிலும் சிகிச்சை புகார்தாரர் எடுத்துக்கொள்ளவில்லை என்றால் புகார்தாரர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை ஏதும்பெறவில்லை.

5. புகாரில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையில்லை யென்றால் சரியல்ல. புகார்தாரர் அளித்த புகாரை சரிவர விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6. வழக்காவணங்கள் அனைத்தும் சம்பவ இடம் செல்லாமல் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கை சரிவர விசாரணை செய்யாமல் அவசர கதியில் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.